# மேல்நிலை இரண்டாம் ஆண்டு------ கணக்குப்பதிவியல்

## பாடம் – 2 . முழுமை பெறா பதிவுகளிலிருந்து கணக்குகள் (ஒற்றைப் பதிவு)

காலம் : 75 நிமிடம் மதிப்பெண்கள் : 50

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $10 \times 1 = 10$

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. வியாபாரத்தின் முதலினை அறிய தயாரிக்கப்படுவது -----------
   (அ) வியாபாரக் கணக்கு (ஆ) இலாப அல்லது நட்ட அறிக்கை (இ) நிலை அறிக்கை
2. ஒற்றைப்பதிவு முறையில் -------- கணக்கு மற்றும் பெயரளவு கணக்குகள் பதியப்படுவது இல்லை.
   (அ) ஆள்சார் (ஆ) ரொக்க ( இ) சொத்து
3. ஒற்றைப்பதிவு முறை என்பது -------- நிறுவனங்கள் இரட்டைப் பதிவுமுறையை தங்கள் வசதிக்கு ஏற்ப மாற்றியமைத்து பயன்படுத்தும் குறைபாடுள்ள ஒரு முறையாகும்.
   (அ) அரசு (ஆ) சிறு வியாபார ( இ) கூட்டுபங்கு
4. நிலை அறிக்கை முறை --------- முறை எனவும் அழைக்கப்படும்.
   (அ) மாற்றுதல் (ஆ) நிகர மதிப்பு இ) இருப்புநிலக் குறிப்பு
5. கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு ---------
   (அ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு (ஆ) மொத்தக் கடனாளிகள் கணக்கு
   (இ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
6. 01.04.2016 அன்று பற்பல கடனாளிகள் ₹. 49,600. 31.03.02017 அன்று பற்பல கடனாளிகள் ₹. 59,900. அவ்வாண்டு கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹. 69,500 எனில், அவ்வாண்டில் கடன் விற்பனை --------
   (அ) ₹. 20,000 (ஆ) ₹. 59,200 (இ) ₹. 79,800
7. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்த சொத்துகள் ₹. 22,100. அவருடைய பொறுப்புகள் ₹. 5,050. அவருடைய முதல் ----------- ஆகும்.
   (அ) ₹. 17,150 (ஆ) ₹. 17,050 (இ) ₹. 17,500
8. மொத்த விற்பனை விலை ₹. 3,70,000. ரொக்க விற்பனை ₹. 2, 65,150. எனில் கடன் விற்பனை ₹. ---------
   (அ) ₹. 1,05,150 (ஆ) ₹. 1,04,850 (இ) ₹. 1,05,850
9. பொறுப்புகளை விட கூடுதலாக உள்ள சொத்துக்கள் ----------- ஆகும்.
   (அ) முதல் (ஆ) ரொக்க ( இ) பொறுப்புகள்
10. ஆண்டுத் தொடக்கத்தில் நிலை அறிக்கையைத் தயாரிப்பதன் மூலம் --------- முதலை அறியலாம்.
    (அ) தொடக்க (ஆ) இறுதி ( இ ) கூடுதல்

## பகுதி --- II

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 11- க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 2 = 8$

11. மாற்றுதல் முறை என்றால் என்ன ?
12. நிகர மதிப்பு முறை என்றால் என்ன ?
13. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடுக.
    தொடக்க முதல் ₹. 24,000 ; எடுப்பு ₹. 25,200 ; இறுதிமுதல் ₹. 13,000 ; கூடுதல் முதல் ₹.42,000
14. விடுபட்ட தகவல்களை காண்க :
    எடுப்பு ₹. 500 ; இறுதிமுதல் ₹. 7,000 ; தொடக்க முதல் ₹. 7,000



15. எடுப்பு இல்லாத நிலையில் விடுபட்ட தகவலைக் காண்க :
    இறுதி முதல் ₹.91,000 ; தொடக்க முதல் ₹.35,000 ; அவ்வாண்டிற்குரிய இலாபம் ₹.14,000
16. கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டு தொடக்க முதலைக் காண்க.

| விவரம் | 31.03.2002 ₹ | 31.03.2003 ₹ |
|---|---|---|
| கை ரொக்கம் | 4,000 | 6,000 |
| வங்கி ரொக்கம் | 2.000 | 4,000 |
| சரக்கிருப்பு | 24,000 | 24,000 |
| அறைகலன் | 6,000 | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | 10,000 | 15,000 |

## பகுதி --- III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 18 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 3 = 12$

17. நிலை அறிக்கை என்றால் என்ன ?
18. ஒற்றைப் பதிவு முறைக்கு வரைவிலக்கணம் தருக.
19. ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை திரு.மதி அவர்கள் வைத்திருந்தார். கீழ்கண்ட விவரங்களைக்கொண்டு 2016-17 ஆம் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| 1.4.2016 அன்று முதல் | 42,000 | 31.3.2017 அன்று முதல் | 30,000 |
| நிதியாண்டில் எடுப்பு | 3,000 | நிதியாண்டில் கூடுதல் முதல் | 6,000 |

20. பற்பல கடனாளிகளின் இறுதி இருப்பைக் காண்க :

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனாளிகள் (தொடக்க இருப்பு) | 25,000 | பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 23,000 |
| விற்பனைத் திருப்பம் | 2,200 | கடன் விற்பனை | 3,500 |

21. திரு. மாதவன் அவர்கள் ₹. 1,20,000 முதலுடன் 1.4.2015 அன்று தொழில் தொடங்கினார். அவர் ஒவ்வொரு மாதமும் ₹. 1,000 வீதம் தன் சொந்த செலவிற்கு எடுத்துக் கொண்டார். மேலும் அவர் ₹. 20,000 கூடுதல் முதலாக இட்டார். 31.03.2016 அன்று நிறுவனத்தின் முதல் ₹. 1,16,500 என்றானது. மேற்கண்ட விவரங்களிலிருந்து, நிறுவனம் இலாபம் அடைந்ததா அல்லது நட்டம் அடைந்ததா என்பதனைக் கண்டறியவும்.
22. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு மொத்தக் கொள்முதலைக் காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் (தொடக்கம்) | 1,50,000 | பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 45,000 |
| பெற்ற தள்ளுபடி | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| பற்பல கடனீந்தோர் ( இறுதி ) | 1,80,000 | ரொக்க கொள்முதல் | 80,000 |

# பகுதி --- IV

<u>எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.</u> 4 × 5 = 20

23. திரு. முரளி ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருக்கிறார். 31.3.2002 மற்றும் 31.3.2003 ஆகிய நாட்களில் அவரது சொத்துகளும், பொறுப்புகளும் கீழ்க்கண்டவாறு இருந்தன :

| விவரம் | 31.03.2012 ₹ | 31.03.2013 ₹ |
|---|---|---|
| ரொக்க இருப்பு | 5,000 | 60,000 |
| பற்பல கடனாளிகள் | 75.000 | 1,00,000 |
| சரக்கிருப்பு | 35,000 | 24,000 |
| அறைகலன் | 15,000 | 50,000 |
| பற்பல கடனீந்தோர் | 15,000 | 30,000 |

அவர் அவ்வாண்டில் ₹.15,000 கூடுதல் முதல் இட்டார். அவர் தனது சொந்த செலவுக்காக ₹.35,000 திரும்ப எடுத்துக் கொண்டார். 2002-03ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக

24. தேவையான கணக்குகள் தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 1,00,000 | பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 5,90,000 |
| தொடக்க பற்பல கடனீந்தோர் | 65,000 | பெற்ற தள்ளுபடி | 3,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 40,000 | அளித்த தள்ளுபடி | 5,000 |
| வெளித்திருப்பம் | 10,000 | உள்திருப்பம் | 6,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | 70,000 | இறுதி பற்பல கடனீந்தோர் | 50,000 |
| ரொக்க விற்பனை | 50,000 | ரொக்கக் கொள்முதல் | 25,000 |

25. திரு. செல்வம் 01.4.2015 அன்று ₹. 75,000 முதல் வைத்து வியாபாரத்தை தொடங்கினார். கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு 31.03.2016 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்குகளை தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,21,000 | விளம்பரம் | 5,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 1,75,000 | பற்பல கடனாளிகள் இறுதி இருப்பு | 75,000 |
| உள்தூக்கு கூலி | 4,500 | பற்பல கடனீந்தோர் இறுதி இருப்பு | 50,000 |
| பற்பல கடனாளிகளுக்கு அளித்த தள்ளுபடி | 4,000 | இறுதிச் சரக்கிருப்பு | 35,000 |
| சம்பளம் | 5,000 | அலுவலகச் செலவுகள் | 4,000 |

குறிப்பு : முதல் மீது வட்டி 10% அனுமதிக்க.



26. கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு 31.03.2005 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப நட்டக் கணக்கினை தயார் செய்க.

| விவரம் | 31.03.2004 ₹ | 31.03.2005 ₹ |
|---|---|---|
| ரொக்க இருப்பு | 12,500 | 25,000 |
| பற்பல கடனாளிகள் | 1,25.000 | 1,75,000 |
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 87,500 |

<u>மற்ற விவரங்கள்</u> :

| | | | |
|---|---|---|---|
| பெற்ற தள்ளுபடி | 7,500 | அளித்த தள்ளுபடி | 5,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 2,25,000 | பல்வகைச் செலவுகள் | 15,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,67,500 | எடுப்புகள் | 20,000 |
| விற்பனைத்திருப்பம் | 7,500 | கொள்முதல் திருப்பம் | 2,500 |
| மொத்த இலாபம் | 52,500 | | |

27. திரு. மாலன் அவர்கள் தனது கணக்கேடுகளை ஒற்றைப்பதிவு முறையில் வைத்திருக்கிறார். 01- 04-2013 அன்று அவரது முதல் ₹. 5,00,000.

கூடுதல் தகவல்கள் :

| விவரம் | ₹. |
|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 2,50,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 50,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர்க்கு அளித்த ரொக்கம் | 60,000 |
| பற்பல கடனாளிகள் - தொடக்க இருப்பு | 40,000 |
| பற்பல கடனீந்தோர் - தொடக்க இருப்பு | 1,83,000 |
| வியாபாரச் செலவுகள் | 1,20,800 |
| வளாகம் ( 31-03-2014 ) | 4,00,000 |
| அறைகலன் ( 31-03-2014 ) | 7,200 |
| இறுதி சரக்கிருப்பு | 2,60,000 |
| பற்பல கடனாளிகள் - இறுதி இருப்பு | 80,000 |
| பற்பல கடனீந்தோர் - இறுதி இருப்பு | 2,00,000 |
| இறுதி ரொக்க இருப்பு | 55,000 |

மார்ச் 31, 2014 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலை குறிப்பையும் தயார் செய்க.